[1973 ஆகஸ்ட் 4

காவிரிப் படுகையில் எண்ணெய் வளம்.

***21. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நதி தீரத்தில் எண்ணெய் வளம் இருப்பதைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். எண்ணெய் இயற்கைவாயு குழு காவிரிப் படுகையில் எண்ணெய் வளத்தைக் கண்டறிய ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளது. வணிக முறையில் எடுக்கக்கூடிய அளவிற்கு எண்ணெயோ அல்லது இயற்கை வாயுவோ மண்டியிருப்பதாக இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் இதுபற்றிய பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, எந்த எந்த ஊர்ப் படுகைகளில் ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஊர்கள் விவரம் இல்லை. பாண்டிச்சேரிப் பகுதியிலும் நம்முடைய மாநிலத்திலே காவிரிப் படுகையிலும் இந்த ஆராய்ச்சி நடைபெற்றிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, காவிரி நதிப் படுகையிலே இந்த எண்ணெய் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அதற்காகத் தோண்டுகிறார்கள். அதிலே எண்ணெய் கிடைக்காத நிலையிலே அதை முழுவதும் மூடிவிடச் சொல்லி விடுகிறார்கள். அதற்குப் பதிலாக, தண்ணீர் கிடைக்கின்ற அளவுக்கு அதை மூடி, அந்நீரை அந்தப் பகுதியிலே பாசனத்திற்குப் பயன்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நல்ல யோசனை. அவர்களுக்கு எழுதலாம்.

திரு. என். கே. பழனிசாமி : எண்ணெய் வளம்பற்றி ஏற்கனவே 'செஸ்மிக் சர்வே' நடத்தப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதன் முடிவு என்ன ?

1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாகச் சொன்னேன். இதிலே 'கமர்ஷியல் எக்ஸ்பிளாய்ட்டேஷன்' என்ற அளவிலே கிடைக்கவில்லையென்றுதான் மத்திய அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறது.

திரு. இராம அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பே மத்திய அரசின் சார்பில் காரைக்காலிலிருந்து காரைக்குடி வரையில் இந்தச் சோதனையை நடத்த ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். 10 ஆண்டுகளாகியும் இன்னும் இந்தச் சோதனை முற்றுப் பெறாததற்குக் காரணம் யார்? நம்முடைய அரசா, மத்திய அரசா? அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய அரசுதான் இந்தச் சோதனையை நடத்தி வருகிறது. அவர்களுடைய முடிவு இந்தப் பகுதியிலே அதிக அளவிலே, பயன்படுத்துகிற அளவுக்கு எண்ணெயோ, வாயுவோ கிடைக்காது என்பது. இத்துடன், இன்னும் அதிக அளவில் கிடைக்கின்ற மாநிலங்களுக்கு 'பிரிஃபெரென்ஸ்', முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

Employees in Mint Street Branch of Government Press.

* 22 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) the number of workers employed in the Government Press at Mint Street, Madras; and

(b) the number of workers for whom Government accommodation has been provided?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 4,311.

(ஆ) 300.

திருமதி த. ந. அனந்தநாயகி: தொழிலாளர்களுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிற அரசு, அதனிடம் வேலை செய்கிற 4,311 பேர்களுக்கு வசதிசெய்துகொடுக்காமல் இருக்கிறார்களே, எப்பொழுது அதைச் செய்யப்